★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 17உ வெள்ளி (30—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 18உ சனி (31—3—56) [இதழ் 246

இந்தியத் தொழிலாளர் எண்ணிக்கை!

இந்தியா முழுமையிலும் இன்றைய வரையில் 13,93,00,000 தொழிலாளர்கள் இருக்கின்றனராம்.

இவர்களில் 9,87,00,000 பேர் ஆண்கள் என்றும், 4,06,00,000 பேர் பெண்கள் என்றும் புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானிலுள்ள மொத்த தொழிலாளர்கள் தொகை 2,26,00,000 என்றும், அவர்களில் ஆண்களும் பெண்களும் முறையே 2,13,00,000, 13,00,000 என்றும் தெரிகிறது.

மண்டலக் குழு அமைப்பும் திராவிட நாடும் ஒன்றும்!

கழகம் கருத்தறிவிக்காத நிலையிலும் தூற்றுகிறார்!

'தேவிகுளம்-பீர்மேடு சென்னையுடன் இணைக்கப்பட வேண்டும்'

'எல்லைக் குழு ஏற்படுத்தும் அவசியத்தை வற்புறுத்தவும்'

திருத்தங்கள் மீது உறுப்பினர்கள் விவாதம்

சென்னை, மார்ச் 28—

"தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுகாக்கள் போக, மற்ற 5 தாலுகாக்களும் திரு-கொச்சி மாநிலத்திலேயே இருக்க வேண்டும்"

என்று, கே. குன்னி முகமது ஷபீ என்ற உறுப்பினர், மாநிலப் புனரமைப்பு மசோதாவுக்குத் திருத்தப் பிரேரபணை கொண்டு வந்தார்.

"தோவாளை, அகத்தீசுவரம் ஆகிய நான்கு தாலுகாக்களும், செங்கோட்டைப் பகுதியும் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளாக்கப்பட வேண்டும்"

என்பது மசோதாவின் 4-வது பிரிவாகும்.

இந்தப் பிரிவுக்கு மூன்று பகுதிகளாக ஆறு திருத்தங்களை கொண்டு வரப்பட்டன. அந்த முதல் பகுதி திருத்தத்தில்தான் மேற்குறிப்பிட்டவாறு குன்னு முகமது ஹபீ பிரேரபணை தந்திருக்கிறார்.

இரண்டாவது பகுதி திருத்தப் பிரேரபணையில், 'தேவிகுளம், பீர்மேடு, மற்றும் சில குறிப்பிட்ட பகுதிகள் சென்னை மாநிலத்திற்குத் தரப்படவேண்டும்' என்று கோரப்பட்டிருக்கிறது.

மூன்றாவது பகுதி பிரேரபணை, 'தகராறுகளுக்கு இடமுள்ள பகுதிகளில் உடனடியாக எல்லைக் குழு நியமிக்கப்பட வேண்டும்' என்பது.

"அகத்தீசுவரம், தோவாளை, கல்குளம், வளவன்கோடு ஆகிய தாலுகாக்களுடன் நெய்யாற்றங்கரை தாலுக்காவும், செங்கோட்டை தாலுகா முழுவதும், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளும், நெம்மாரா பகுதியைத் தவிர்த்த சித்தூர் (கோச்சின்) தாலுகாவும் சென்னைக்குத் தரப்பட வேண்டும்,"

என்று, தோழர் கே. விநாயகம் திருத்தப் பிரேரபணை கொண்டு வந்தார்.

இதே பிரேரபணைகளை தோழர்கள் எஸ். சுயம்பிரகாசமும், எஸ்.பி. தங்கவேலும் கொண்டுவந்தனர்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் கொண்டுவந்த திருத்தப் பிரேரபணையில், "கோரப்பட்டிருக்கிற கேரளமாநிலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற செங்கோட்டைத் தாலுகாவின் ஒரு பகுதி, இப்போதிருக்கிற திரு-கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த தேவிகுளம், பீர்மேடு, கொச்சின்-சித்தூர், நெய்யாற்றங்கரை, பாலக்கோடு ஆகிய பகுதிகள் மீது, எழுந்துள்ள தகராறுகளை மொழிவாரி அடிப்படையில் தீர்த்துவைக்க, இம்மசோதா நிறைவேற்றப்பட்ட ஒருமாத காலத்திற்குள்ளாக ஒரு எல்லைக் குழு நியமிக்கப்பட வேண்டும்" என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தோழர் கே. விநாயகம் அவர்கள் தம்முடைய பிரேரபணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற நமது கோரிக்கை ஏன் நிராகரிக்கப்பட்டதென் பதற்கான சரியான காரணத்தை மத்திய சர்க்கார் கூறவில்லை. தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கு இல்லை என்று, அப்பகுதிகளில் வாழும் நிலையற்ற—நிரந்தரமாகக் குடியிராத மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுத்தான் தீர்ப்புக் கூறியிருக்கின்றனர்; இது தெளிவற்ற ஆதாரமாகும். நெம்மாரா பகுதி ஒன்று தவிர்த்து, கொச்சின்—சித்தூர் தாலுகாவில் உள்ள 30 கிராமங்களிலும், தமிழ் மொழி பேசும் மக்கள்தான் இருக்கின்றனர். எனவே, அப்பகுதிகளை சென்னையுடன் சேர்ப்பதுதான் நியாயமும், சரியானதுமாகும்."

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மேற்குறிப்பிட்ட திரு—தமிழகப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படாவிட்டால், அப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள், தற்போது ஆந்திர மாநிலத்தில் அகப்பட்டு தகராறுக்குள்ளாகியிருக்கும் தமிழகப் பகுதிகளில் வாழும் மக்களைப் போலவே, திரு—கொச்சி சர்க்காரால் கொடுமைக்குள்ளாக்கப்படுவார்கள்" என்றார்.

தோழர் தங்கவேலு, தம்முடைய பிரேரபணையை வலியுறுத்திப் பேசுகையில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டே ஆகவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

தோழர் எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முன்னர், மாநிலப் புனரமைப்புக் குழு விடுத்த சிபாரிசுகளை சட்டசபையில் விவாதித்த

(4-ம் பக்கம் பார்க்க)

மலையாளக் கம்யூனிஸ்டு

கே.பி. கோபாலன் போக்கு

"திரு—கொச்சியில் இணைந்திருக்கும் ஐந்து தாலுகாக்களை சென்னையுடன் இணைக்கும் முடிவு சரியானதாகும். மேலும் சில பிரதேசங்களை மாற்றுவதை நான் எதிர்க்கிறேன்."

—மாகாணப் புனரமைப்பு மசோதாவின்மீது பேசிய பேச்சிடைக் குறிப்பிட்டது

கைவிட மாட்டாராம்!

பீகார்—வங்க மாநில இணைப்புப் பிரச்சினையைக் கைவிடப்போவதில்லை; வங்க மாநிலத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்த இரு மாநில இணைப்புத் திட்டம் ஒன்றுதான் வழி"

என்று, மேற்கு வங்க மாநில முதலமைச்சர் பி. சி. ராய், மாநில சட்டசபையில் கூறியிருக்கிறாராம்!

மண்டலக் குழுவுக்கு எதிர்ப்பு

சென்னை, மார்ச் 28—

"தட்சிணப் பிரதேசம் போன்ற விரிவான பன்மொழி அமைப்பின் ஒரு சிறு கூறாக, பார்ப்பதற்குத் தீமையற்றதாகத் தோன்றும் இந்த மண்டலக் குழு ஏற்பாடு இருக்கக் கூடுமே என நான் அஞ்சுகிறேன். எல்லையோரங்களில் உள்ள சிறு பகுதிகளுக்காகத் தங்களுக்குள்ளாக சச்சரவிட்டுக் கொண்டிருப்பதைவிட, அந்தச் சங்கடமானப் பிரச்சினையைத் தீர்ப்பதை ஒரு எல்லைக் குழுவிடம் விட்டுவிடுவதே நல்லது,"

இக்கருத்தை சி. எஸ். கனரான் என்ற பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர், சட்டசபையில் வெளியிட்டுள்ளார்.

✶

திராவிட நாடு கோட்பாட்டை அறிய விரும்பவில்லையாம்!

தட்சிணப் பிரதேச எதிர்ப்பைத் திரித்துக் கதைக்கிறார் துன் மந்திரி

சென்னை, மார்ச் 29—

புதிய மண்டலக் குழு அமைப்புப்பற்றி, நமது தி. மு. கழகம், இன்னும் தனது கருத்தைத் திட்டவட்டமாகக் கூறவில்லை.

இருமொழி மாநில அமைப்புக் கருத்தான தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தைத்தான், நமது கழகம் அதிகாரபூர்வமாகச் சர்வகட்சிக் கூட்டணியுடன் இணைந்து, தனது முழு பலத்தையும் காட்டி எதிர்த்து இருக்கிறது.

அவ்வெதிர்ப்பு வீண் போகவில்லை. வெற்றி கிடைத்திருக்கிறது.

முதலமைச்சர் காமராசர் காங்கிரஸ் மேலிடத்தின் சீற்றத்திலிருந்து தப்பிப் பிழைக்க, நாம் கூட்டாக மேற்கொண்ட தட்சிணப் பிரதேச எதிர்ப்பு, தக்க தருணத்தில் பயன்பட்டு இருக்கிறது.

அவ்வெதிர்ப்பு நடவடிக்கையை தமிழ் மக்களின் ஏகோபித்தத் தீர்ப்பு என வெளிப்படையாக ஒப்ப நிதி அமைச்சர் வெட்கப்பட்டபோதிலும், அவர் அதை, உள்ளூர உணர்ந்து கொண்டே இருக்கிறார் என்பதை, எதிர்க் கட்சியைத் தூற்றும் அவர் ஆணவப் போக்கே போதிய சான்றாகும்.

"திராவிட நாடு எனப் பேசுகிறவர்கள், அந்த நாடு தமிழ், மலையாளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய மொழியினரைக்கொண்டது என்பதை அறிந்தே இருக்கிறார்கள். அவர்கள் திராவிட நாடு நிலப்படத்தைக்கூட வெளியிட்டிருக்கிறார்கள்.

"ஆனால், குறிப்பிட்ட விவகாரங்களுக்காக அம்மொழி வழங்கும் பகுதிகளை ஒன்றாக இணைக்கும் கருத்து கூறப்பட்டால், அது, திராவிடநாடு கோருபவர்களால் எதிர்க்கப்படுகிறது.

"கொள்கை காரணமாக இக்கருத்தை அவர்கள் எதிர்க்கவில்லை. இது வெறும் தேர்தல் அரசியலாகும். மக்களைத் தவறாக நடத்த அவர்கள் முயலுகிறார்கள்."

இக்கட்டத்தில், தோழர் கோவிந்தசாமி அவர்கள் குறுக்கிட்டு விளக்கியதாவது:—

"இது தேர்தல் அரசியல் என்று அமைச்சர் கூறியதை மறுக்கிறேன். மத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டு தனிச் சுதந்திர ஆட்சியாக விளங்கவேண்டும் என்ற உயர்கருத்துத்தான், திராவிட நாடு கோரிக்கையின் உள்ளடக்கமாகும். ஒருவேளை, இவ்வுண்மையை அமைச்சர் ஒழுங்காக அறிந்து கொள்ளாது இருக்கக் கூடும்."

"திராவிட நாடு கோரிக்கையையோ அதன் பொருளையோ நான் அறிந்துகொள்ள விரும்பவில்லை. தெற்கிலிருக்கும் சில குறிப்பிட்ட ராஜ்யங்களை, அவைகளின் ஒத்த நன்மைக்காக ஒழுங்கு சேர்க்க முயற்சிக்கப்படுவதை, அவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதையே நான் வலியுறுத்துகிறேன்."

மண்டலக்குழு அமைப்புப் பற்றி கம்யூனிஸ்டு உறுப்பினர்கள்

சென்னை, மார்ச் 28—

மண்டலக்குழுவை வரவேற்று கம்யூனிஸ்டு கட்சி சட்டசபை உறுப்பினர்களான தோழர்கள் ஜீவானந்தம், மணலி கந்தசாமி, கே. டி. ராஜு ஆகியோர் மாநிலப் புனரமைப்புமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசியுள்ளனர்.

பரம்பிக்குளம் பாசனத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்பதற்காகவே மண்டலக் குழுவைத் தங்கள் கட்சி வரவேற்பதாகக் கே. டி. ராஜு குறிப்பிட்டார்.

திரு தமிழகப் பகுதி தேவஸ்வம் நிதி

ஏ. நேசமணி கோரிக்கை

நாகர்கோவில், மார்ச் 29—

தாய்த் தமிழகத்துடன் இணைய இருக்கும் திரு-கொச்சித் தமிழகப் பகுதி தேவஸ்வங்களின் பங்காக ரூ. 4½ இலட்சம்தான் கிடைக்குமென மாநில சீரமைப்பு மசோதாவில் கண்டிருக்கிறதல்லவா? ஆனால், தி. த. நா. கா. தலைவர் ஏ. நேசமணி அவர்கள், "திரு-கொச்சித் தமிழ்ப் பகுதி தேவஸ்வம் நிதியிலிருந்து, தமிழ் வட்டங்களின் பங்காக ரூ. 15 இலட்சம் பெறவேண்டும்."

என்று, சென்னை முதலமைச்சருக்கும், நிதியமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளாராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30-3-'56 வெள்ளி

தகுதி வாய்ந்தத் தலைமை தரும் பணியா?

★

இந்தியத் துணைக்கண்டத்தை ஆண்டுவருவது, தகுதி வாய்ந்தத் தலைமையாகும் என்று நமது நிதி அமைச்சர், சட்டசபையில் பிரலாபித்து இருக்கிருர். அந்தத் தகுதி வாய்ந்தத் தலைமையின் அரவணைப்பில், அடுத்த கட்டத்தில், தனக்கு ஒரு இடம் தேடிக்கொள்ளும் தொலைநோக்குடன்தான், நிதி அமைச்சர் அவ்வாறு இச்சகமாகப் பேசியிருக்கிருர் என்று சிலர் எண்ணக்கூடும்.

காங்கிரஸ் அரசியல் சுழற்சியில் சிக்கிக்கொண்டுள்ள பல இடந்தேடிகள், இவ்வாறு இச்சகம் பேசுவதைத்தான் ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிருர்கள் என்றும் சிலர், முன்மொழியப் பட்டதை வழிமொழியக்கூடும். ஆட்சிப் பொறுப்பில் உள்ளத் தலைமையை ஒப்பற்றத் தகுதி வாய்ந்தது என இச்சகம் பேசித் திரிகின்ற அருந்திறத்தைவிட, அத்தலைமையின் கருணைகடாட்சத்தால் பதவித் தாங்கிகளாக இருப்பவர்களுக்கு வேறு சிறப்பொன்றும் அறவே கிடையாது எனக் கருதுவோரும் உண்டு. அவ்வாறு எல்லாம் நிதி அமைச்சர் போன்ற இச்சகத் தூதுவர்களைக் குறித்து, வீண் ஆராய்ச்சியில் இறங்க வேண்டிய நிலைமை நமக்கு எப்பொழுதும் ஏற்படவே வேண்டாம்.

மாகாணப் புனரமைப்பு மசோதாவை அப்படியே ஏற்க வேண்டும் என வாதாடிய பொழுது, மாகாணப் புனரமைப்பைவிட தங்கள் கருத்தைச் செலுத்த வேண்டிய முக்கியமானதாக இருப்பது பொருளாதார அபிவிருத்தியாகும் என்று அரசியல் விஷமிகளால் தவருன வழியில் இட்டுச் செல்லப்பட்டுள்ள அறியாமையில் மூழ்கிக்கிடக்கின்றத் தமிழ் மக்களுக்கு, நேரான பாதையைக் காட்டி இருக்கிருர், தொண்டுள்ளத்திற்கு நடமாடும் நினைவுத் தூணாக இருக்கும் நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியனுர். அதுவுமன்றி, முக்கியமான பொருளாதாரமுன்னேற்றத்தை மறந்துவிட்டு, மாகாணப் புனரமைப்புத்தான் முக்கியமானது எனத் தவருக நினைத்துக்கிடக்கும் நிலைக்குத் தமிழ் மக்கள் வந்துவிட்டதாகக்கூட, ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடிக்கிடக்கும் கொக்கின் பரோபகாரப் பண்புடைய நமது நிதி அமைச்சர், ஆற்று வெள்ளப் பெருக்கெனக் கண்ணீர் வடிக்கிருர்.

நிதி அமைச்சரின் தொண்டுள்ளமும், தமிழ் மக்கள்பால் கொண்டுள்ளப் பற்றும், தமிழ் மானத் தகைமையும், தமிழ் மக்களால் நன்கு அறிந்து ஒப்புக்கொள்ளப்படாமல் இருப்பது வருந்தத்தக்கதே. அது, மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். அதற்காக, டெல்லி தகுதி வாய்ந்தத் தலைமை கண்டிப்பாகத் தண்டித்தேயாக வேண்டும், தமிழ்க் குலத்தை மிக மிகக் கடுமையாக! நிற்க.

மாகாணப் புனரமைப்பைவிட முக்கியமானதும், தமிழ் மக்கள் கருத்துச் செலுத்த வேண்டியதுமாக இருந்து வருவது பொருளாதார முன்னேற்றமாகும் என நிதி அமைச்சர் நல்ல மேய்ப்பவராக நவின்றிருக்கிருர். அவர் உயர்த்திக் கூறிய பொருளாதார அபிவிருத்தியில், தமிழ் மக்களுக்கு இதுவரை கிடைத்துள்ள இடம் அல்லது வாய்ப்பு என்ன என்பதை ஆராய்வோம்.

ஆற்றல் படைத்த ஆங்கில ஏகாதிபத்திய 'அலங்கோல ஆட்சி'யில், உள்நாட்டில் வறுமையையும், வெளிநாடுகளில் 'கூலி' என்ற சிறப்புப் பட்டத்தையுமே தமிழ் மக்கள் ஒப்பற்றப் பரிசுகளாகப் பெற்று வந்திருக்கின்றனர். பெரும்பாலான தமிழ் மக்கள் நிலை இதுதான்.

இப்பொழுது தகுதி வாய்ந்தத் தலைமையால் சிலருக்கு வழங்கப்படும், 'பத்மபூஷன்—பத்மவிபூஷன்' போன்ற விருதுகள் போன்றே, அப்பொழுதும் ஆங்கில 'அலங்கோல ஆட்சி'யில் சிலருக்கு 'ராஜா சர்—சர் — ராவ்பகதூர் —' போன்ற விருதுகள் சூட்டப்பட்டுத்தான் வந்தன. அப்படி உயர் பட்டம் சூட்டப்பட்ட அதே ஆட்சிதான், அதே நாட்களில், தமிழ் மக்களை இல்லாமையிலும், வெளிநாடுகளுக்குக் 'கூலி'களாக அனுப்பிக் கொண்டும் இருந்தது!

இப்பொழுதும், தகுதி வாய்ந்தத் தலைமையின் கீழும் தமிழர்களுக்குக் கிடைத்துவரும் மகோன்னத வாழ்வு, ஆங்கிலேயே அலங்கோல ஆட்சியில் கிடைத்துவந்த 'கூலி' நிலையில்தான் இருக்கிறது!

ஆங்கில ஏகாதிபத்திய ஆற்றல் மிக்க அலங்கோல ஆட்சியும், தகுதிவாய்ந்தத் தலைமையின்கீழ் நடைபெறும் இக்கால ஆட்சியும், தமிழ் மக்களைப் பொருத்தவரையில், எந்தத் தன்மையில்தான் நடந்துகொண்டு வந்தது—வருகிறது!

வெள்ளைக் கொள்ளையன் ஆட்சியில், உள்நாட்டில், பஞ்சத்தாலும், கொடும தொத்து நோய் பலவற்ருலும், வேலையற்றக் கொடுமையாலும், பற்ருக்குறை வேலையாலும் தமிழ் மக்கள் தவித்துக் கிடந்தனர்; சாவை நோக்கி மெள்ள மெள்ள நகர்ந்துகொண்டு இருந்தனர்!

இன்று, அந்த அவல நிலையில் ஏற்பட்டு இருக்கின்ற மாற்றந்தான் என்ன?

அன்ரே, தமிழ் மக்கள் மரணம் இருக்குமிடம் நோக்கி நகர முடியாமல் நகர்ந்து சென்றனர்! இன்ரே, மரணம தமிழ் மக்கள் இருக்குமிடத் திறகே தேடிவந்துவிடுகிறது!

இதுதான், தகுதி வாய்ந்தத் தலைமை, தமிழ் மக்களுக்குத் தந்துவரும், ஒப்புவமையற்ற பொருளாதார முன்னேற்றம்!

சிலோன் தேயிலைக் காட்டுக்கும், சிங்கப்பூர் ரப்பர் மரக் காட்டுக்கும், தமிழ் மக்களைக் கடத்திச் சென்றது, ஆற்றல் மிக்க ஆங்கில ஏகாதிபத்தியம்! தமிழ் மக்களுக்கு 'கூலிகள்' என்றச் சிறப்புப் பெயரை, வெளிநாடுகளில் எல்லாம் தேடித் தந்தது அந்த ஏகாதிபத்தியம்!

இதோ, தகுதி வாய்ந்தத் தலைமை, தமிழ் மக்களுக்குத் தரும் வாழ்வைப் பாருங்கள்! பார்த்துவிட்டுக் கூறுங்கள்—அந்தத் தலைமைக்கு, நிதி அமைச்சர் தந்தத் 'தகுதி வாய்ந்தத் தலைமை' என்றச் சிறப்புப் பொருந்தக்கூடியதா என்பதை!

அந்தமான் — நிக்கோபார் தீவுகளுக்கு அறுபது தமிழ் உழவர் குடும்பம் குடியேற்றப்பட இருக்கிறதாம்!

எந்த அவமானத்தையும் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மானமற்ற காமராசர்—சுப்பிரமணியம் அச்சு போன்ற தலைமை தமிழ் மக்களுக்கு, தீமையுள் எல்லாம் பெருந்தீமையாக வாய்த்திருக்கிறது என்ற உள்ளப் பூரிப்பில், பணம் குவியும் பயனுள்ளத் தோட்டங்களாகவும், பொன் கொழிக்கும் போக பூமியாகவும், தம் உழைப்பால் அந்தமான் காடுகளைத் திருத்தம் செய்ய, முன்னூறு தமிழ் வீரக் காளைகளைக் கடத்திச் செல்ல, தொழில் தேடித்தரும் நிறுவனம் எனும் பெயரிய வடவர் ஏமாற்றுக் கருவூலம் மூலம், தகுதி வாய்ந்தத் தலைமை முயற்சிக்கிறதாம்—முயற்சியில் வெற்றியும் பெற்றுவிட்டதாம்!

பிறந்தத் தாயகத்தை விட்டு வெளியேற்றிச் செல்லும் இவ்வேதனை தரும் திருப்பணிக்கு, போட்டியாம்-பலத்தப் போட்டியாம்! முன்னூறு பேர் தேவை என்றதும், தமிழ் இளைஞர்கள் அறுநூறு பேர் மனுச் செய்து கொண்டார்களாம்!

வீட்டில் உள்ள கொல் வறுமை, பிறந்த நாட்டை விட்டுக் கடத்திச் செல்லப்படுவதற்கும், பலமாகப் போட்டிப் போடச் செய்கிறது, வரலாறு கண்டத் தமிழ் மக்களை! தமிழ் மக்களுக்குத் தகுதி வாய்ந்தத் தலைமைத் தந்துள்ள பொருளாதார அபிவிருத்தியின் இலட்சணமே இலட்சணம்!

இந்தியத் துணைக் கண்டத்தை ஆண்டுவரும் தகுதி வாய்ந்தத் தலைமை, தமிழ் மக்களுக்குத் தரும் பொருளாதார முன்னேற்றம் தமிழ் இளைஞர்களை அந்தமான் தீவுக்குக் குடியேற்றுவதாக இருக்கிறது!

பிறந்த நாட்டில் அவர்கள் அனைவருக்கும் பணிபுரியும் வாய்ப்புத் தேடித்தரும் நல்உள்ளம் இந்தியத் தலைமைக்கு இல்லை. தமிழ் நாட்டவரில் சிலருக்கு வாழ்வு, அந்தமான் காட்டில் மண்டிக்கிடக்கிறது. இனி அதைத் தோண்டி எடுத்து, அவ்வாழ்வின் சுவையை அங்கு செல்லும தமிழ் வீரர்கள் சுவைக்க வேண்டும்!

தமிழ் மக்களைக் கூலிகளாகக் கடத்திச் செல்லும கயமை நிதி அமைச்சர் அறிந்துள்ள தகுதி வாய்ந்தத் தலைமைக்குரிய உயர் இலட்சணம் பேசும்! நிதி அமைச்சரே, நியாயம கூறும்!

வாயை மூடிக்கொண்டிருப்பதைவிட வேறு வழியில்லையாம்!

ஓடிவரும் அகதிகள் பற்றி மத்திய அமைச்சர்

2 மாதத்தில் 70,000 பேர் வந்தனராம்!

புதுடில்லி, மார்ச் 28—

"இந்தியா — பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே உள்ள பிரச்சினைகளிலெல்லாம் மிகக் கடினமான பிரச்சினை கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவரும் அகதிகள் பிரச்சினை தான். இந்தப் பிரச்சினையை முற்றிலும் தீர்த்துவைக்கும் பொறுப்பு இந்திய சர்க்கார் கையில் இல்லை,"

என்று, டில்லி மக்கள் சபையில், சிறுபான்மையோர் இலாகா — சட்ட அமைச்சர் சி. சி. பிஸ்வாஸ் கூறியிருக்கிருர்.

வெளி விவகார இலாகாவிற்கென மொத்தமாக ரூ. 7 கோடி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்துப் பேசுகையில், கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் ஆகிய இடங்களிலிருந்து ஓடிவந்து இந்தியாவில் குடியேறும் அகதிகள் பிரச்சினையை விளக்கிப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருக்கிருர்.

"இந்தப் பிரச்சினையில் நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அதை எல்லாம் செய்து முடித்தாகிவிட்டது; பாகிஸ்தான் சர்க்காருக்கு நம்முடைய கருத்துக்களையெல்லாம் ஏற்கனவே தெரிவித்தாகிவிட்டது; அவர்கள் இப்பிரச்சினை குறித்து என்னென்ன செய்யவேண்டுமென்பது குறித்தும் அவர்களுக்குக் கூறியாகிவிட்டது; ஆனல் அவர்கள் நமக்குத் திரும்பத் தந்திருக்கிற பதிலோ, 'நாங்கள் என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து முடித்துவிட்டோம்; இனிமேலும் செய்வதற்கு இப்பிரச்சினையில் ஒன்றுமில்லை' என்பதுதான்; எனவே, நாம் இனிமேல் வாயை மூடிக் கொண்டு வாளாவிருக்க வேண்டியதுதான்"

என்று, அவர் மேலும் கூறியிருக்கிருர்.

அயல் பகுதிகளிலுள்ள இந்திய அகதிகள் குறித்து அமைச்சர் பிஸ்வாஸ் சில புள்ளி விவரங்களையும் தந்திருக்கிருர்:—

"1947-ம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு பிப்ரவரி இறுதிவரையில் எடுக்கப்பட்ட புள்ளி விவரக் கணககுப்படி, கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வரக்கூடிய அகதிகளின் எண்ணிக்கை சுமார் 87 இலட்சமாக இருக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

"1941-ம் ஆண்டுக் கணக்கு விவரப்படி, கிழக்கு வங்கத்தில் 120 இலட்சம் இந்துக்கள் இருந்தனர். 10 ஆண்டுகளுக்குப் பிறகு —அதாவது 1951-ல் எடுக்கப்பட்ட புள்ளி விவரம் கிழக்கு வங்கத்தில் 92 இலட்சம் இந்துக்கள் இருப்பதாகத் தெரிவிக்கிறது."

மற்றப் பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்த அகதிகள் புள்ளி விவரங்களையும் அவர் தந்திருக்கிருர்.

சென்ற 1952-ம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் மற்ற இடங்களிலிருந்து அகதிகள் இந்தியாவில் குடியேறினதில, கடந்த இரண்டு மாத காலத்தில் படுமோசமான நிலையை அடைந்துவிட்டிருக்கிறது இந்த இரண்டு மாத காலத்தில் மட்டும் சுமார் 70,000 இந்துக்கள் அகதிகளாக வந்து இந்தியாவில் குடியேறியிருககிருாகள்.

"1947-ம ஆண்டுக்குப் பின்னர், இந்தியா—பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் அரசியல் துறையில் சம்பந்தப்பட்ட நடுத்தர இந்து மக்கள் அனைவரும் கிழக்குப் பாகிஸ்தானை விட்டு ஓடிவந்து விட்டனர். ஆனல் இப்போது, சிறு சிறு வியாபாரிகளும், வர்த்தகர்களும், சிறு சிறு நில உடைமையாளர்களும் கூட இந்தியாவிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

"இந்த நிலைமைகளுக்கெல்லாம் முக்கியக் காரணம் அங்குள்ள இந்துக்கள்மீதும் அவாகளுடைய சொத்துக்கள்மீதும் எழுகின்ற அதிகப்படியான குற்றங்களும், வழக்குகளுமே ஆகும். இதைவிடக் குறிப்பாகச் சொன்னல அங்குளள இந்துப் பெண்கள்மீது சுமத்தப்படுகிற கொடிய விபசாரக் குற்றச்சாட்டுகள்தான், இப்போது அதிகமதிகமாக அவர்கள் அந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கான காரணம்" என்றும் அவர் கூறியிருக்கிருர்.

கச்சாவு தீவு: மத்திய சர்க்கார்கவலையின்மை

'விமானத் தளமாக இலங்கை பயன்படுத்துகிறது'

மக்கள் சபையில் தமிழ் நாட்டு உறுப்பினர் சுட்டிக் காட்டினர்

"தனுஷ்கோடியின் கரையோரமாக உள்ள கச்சாதீவு, முன்பு இராமநாதபுரம் இராசாவுக்குச் சொந்தமாக இருந்தது; அவரிடமிருந்து ஜமீன் நிலங்களை எடுத்துக்கொண்டபோது, இத்தீவு இந்திய சர்க்கார் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது; ஆனல், சமீபகாலத்தில், இத்தீவு மீது இலங்கை சர்க்கார் 'உரிமை' கொள்ள முனைந்து, அதை விமானத்தளமாகப் பயன்படுத்த முற்பட்டிருக்கிறது; ஆனல், இந்திய சர்க்கார் இதுபற்றி போதிய கவனம் செலுத்தவில்லை என்றே எண்ணவேண்டியிருக்கிறது; இதுபற்றி உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும்; இன்றேல், இலங்கை சர்க்கார், இத்தீவை இராணுவத்தளமாக்கி விடும்,"

என்று, மக்கள் சபையில், தமிழ் நாட்டு உறுப்பினர் கே. எம். வல்லத்தரசு ஒரு அவசரப் பிரரேபணை கொண்டு வந்தார்.

பிரதமர் நேரு இதற்குப் பதிலளிக்கையில், இதுபற்றி உடனே விசாரணை நடத்தி அறிவிக்கும்படி சென்னை சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், தற்சமயம் மத்திய சர்க்காரிடம் இதுபற்றிப் போதுமான தகவல் இல்லையென்றும் குறிப்பிட்டார்.

எகிப்துக்கு ரஷ்ய அணுசக்தி உதவி?

எகிப்து பஞ்சுக்குப் பதில் யுரேனியமா?

கெய்ரோ, மார்ச். 28—

எகிப்தியப் பஞ்சுக்கும், மற்றும் பொருட்களுக்கும் பதிலாக, ரஷ்யா, எகிப்துக்கு யுரேனியப் பொருளைத் தருகிறது என்றும், அதன் மூலம் எகிப்தில் அணுசக்தி நிலையங்களை நிறுவ ரஷ்யா முழு உதவியும் அளித்து வருகிறது என்றும் பத்திரிகைச் செய்திகள் தகவல்கள் தருகின்றன.

ஏற்கனவே ரஷ்யா, அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தை நிறுவிக் கொடுத்திருக்கிறது என்றும், இப்போது அத்துறையில் தேவைப்படுகிற எல்லா விதமான தொழில நுணுக்க உதவிகளையும் தர ரஷ்யா முன வந்திருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் 'பூட்ஷ் பாலீஷ்' உற்பத்தி, 1950-ல் ஒவ்வொன்றும் 2 அவுன்ஸ் கொண்ட டின்களில் மொத்தம் 23·1 இலட்சம் டன்னாக இருந்தது, 1955-ல் 100 இலட்சம் டன்னாகப் பெருகிவிட்டது.

தமிழர்கள் ஏமாற்றப்பட்டதற்குக் காரணம் என்ன?

சென்னை கூட்டணிப் பொதுக்கூட்டத்தில் எஸ். சுயம்பிரகாசம், ஏ. சுப்பிரமணியம்

27-3-56ல் சென்னை நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற சர்வ கட்சி கூட்டணிப் பொதுக்கூட்டத்தின இறுதி பகுதி இங்கு தரப்படுகிறது :—

எஸ். சுயம்பிரகாசம்:

"மாநிலங்களை மொழி வழி திருத்தி அமைப்பதற்காக வந்த மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கையிலிருந்து தமிழக மக்கள் மட்டும் அல்லாமல், நாடு முழுமையிலுமுள்ள மக்கள் அனைவரும் கிளர்ச்சிகள் துவக்கினார்கள். அந்தக் கிளர்ச்சிகளைக் கண்டதும் மத்திய சர்க்கார் அவரவர் தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். ஆந்திரர்கள் கேட்ட விசால ஆந்திரத்தை அவர்கள்மீது கொண்டிருந்த அச்சத்தினாலும், தேவிகுளம் — பீர்மேடு பகுதிகளை, கேரளர்கள்மீது கொண்டிருந்த அன்பினாலும் கொடுத்துவிட்டார்கள். ஆனால் தமிழர்கள்தான் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள்; இங்குள்ள காங்கிரஸ்காரர்களும் அது குறித்து எதுவும் பேசக்கூடாதென்று வாய்ப்பூட்டும் போட்டு மேலிடம் முடிவு கூறிவிட்டது இதை எல்லாம் பார்த்தால் நாம் யார்மீதும் குறைபட்டுக்கொள்வதற்கில்லை — தமிழ் நாட்டின் மீதேதான் குறைபட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"இப்போது இருக்கிற நிலையில் 'தமிழருக்கென ஒரு நாடு உண்டா?' என்றுகூடக் கேள்வி எழுகிறது. 'மெட்ராஸ்' என்று கூறுவதால் அகில உலகும் தெரிந்துகொள்கிறது என்கிறாரே, காமராசர்; 'தமிழ் நாடு' என்று கூறினால் தமிழர் பண்பு வெளிவாராதா என்பதை அவர் ஏன் சிந்திக்கவில்லை? தாங்கள் ஏதேனும் செய்துவிட்டால் நேரு என்ன நினைத்துக்கொள்வாரோ என்ற எண்ணத்தினால்தான் அவர்கள் பயந்துகொண்டு நாட்டை இந்த வகையில் சீரழித்து வருகிறார்கள்."

ஏ. சுப்பிரமணியம்:

"ஜனநாயக சர்க்கார் நாங்கள்தான் என்று நேரு முதல் இங்குள்ள அமைச்சர்கள் வரை கூறினார்கள். அதை அடிப்படையாக வைத்து 1952-ல் நடைபெற்ற தேர்தலில் வாக்குப் பெற்று அமைச்சர் பீடம் ஏறிவிட்டார்கள். அமைச்சர் பீடம் ஏறிவிட்ட அந்த மகானுபவர்கள், மக்கள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கிறவர்களாக இருந்தால்—ஜனநாயக விரும்பிகளாக இருப்பார்களானால் மக்களுடைய கோரிக்கைகளை மதித்து நிறைவேற்றியிருக்கவேண்டும். அப்படி மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்களையும், வாய்ப்புக்களையும் நாம் அவர்களுக்குக் கொடுத்தோம்; ஆனால், அதை கைநழுவ விட்டு விட்டு, மக்கள் கருத்தை நிறைவேற்றாத—மக்கள் கோரிக்கைக்கு முற்றிலும் வேறுபட்ட கோரிக்கைகளை மசோதா மூலம் இன்றுகொண்டு வருகின்றனர்.

"உண்மையிலேயே அவர்கள் தமிழ் மக்களின் ஏகோபித்தப் பிரதிநிதிகளாக இருப்பார்களானால் சட்டசபையில் அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம் கூட்டணியினரின் கோரிக்கையை நிறைவேற்றியாக வேண்டும்; இந்த மசோதாவிற்கான திருத்தங்கள் நிறைவேற வழி செய்ய வேண்டும் அவர்கள்! அதற்கு இரண்டு வழிகள் உண்டு; ஒன்று, சட்டசபையில் திருத்தப் பிரேரபணைகளுக்கு ஆதரவாகத் தங்கள் வாக்குகளைத் தரவேண்டும் மற்றொன்று, தாங்கள்தான் உண்மையிலேயே மக்கள் பிரதிநிதிகள் என்று கூறுவார்களானால் — உண்மைப் பிரதிநிதிகள் அல்ல என்பதை உணருகிறோம் — தங்கள் பதவிகளை விட்டுவிலகி, மறு தேர்தலில் போட்டியிடவேண்டும். இதுதான் ஜனநாயகப் பண்பும், நேர்மையும், நாணயமும் கொண்டவர்கள் செய்ய வேண்டிய ஒன்றாகும். அப்படிச் செய்யவார்கள் என்று நம்புவதற்குச் சென்ற காலச் சரித்திரம் நமக்குச் சான்றாக இருக்கவில்லை மக்கள் பிரச்சினை எதுவானாலும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, கேடுகளை துடைக்கச் சென்ற இதே காங்கிரசார், சென்ற 1947-ம் ஆண்டுக்குப் பின்னர், தங்கள் மனச்சாட்சியை மழுங்க விட்டுவிட்டு, மதியையும் அடகு வைத்து விட்டு இருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினை இப்போது மக்கள் மத்தியில்தான் இருக்கிறது. மக்கள் தீர்மானத்திற்கு சர்க்கார் துரோகம் செய்தால் — மக்களுக்கு எதிரான தீர்ப்பு நேருவிடமிருந்துவரும்போது—மக்கள் நல்ல பாடம் கற்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் குறித்து இப்போதே முடிவு செய்து இந்த அவக்கேடான நிலையை நாட்டிலிருந்து ஒழிக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்."

தென்னாட்டின் கோரிக்கைகள்

நியாயவரம்புக்கு உட்பட்டதல்ல?

நிதிக் குழுத் தலைவர் 'சுற்றிவளைத்துப்' பேசுகிறார்

மதுரை, மார்ச். 28—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற சென்னை மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 170 கோடி மிகவும் குறைவானதல்லவா? எவ்வகையிலும் இது தென்னாட்டைப் புறக்கணிப்பதாகாதா?"

இவ்வாறு, இந்திய அரசாங்க நிதிக் குழுத் தலைவர் கே. சந்தானம், மதுரை நகர் மாவட்டக் காங்கிரசுக் குழு அலுவலகத்திற்கு வருகை தந்தபோது, ஒருவர் கேட்டார்.

அக்கேள்விக்குப் பதிலளிக்கும் முகத்தான், நிதிக் குழுத் தலைவர் கூறியதாவது :—

"அரசாங்கத்தில் ஏற்பட்ட சிறு தவறு காரணமாக ஒவ்வொரு மாகாணத்தினரும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிகப்படியான தொகைகளை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நமக்கு எவ்வளவோ தேவைகள் இருக்கலாம். அவைகள் நியாய வரம்பிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டாமா?

"36 இலட்சம் மக்களைக்கொண்ட விந்தியப் பிரதேசமானது வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ. 88 கோடி வேண்டுமென்று கேட்டது. கூடுமானவரை ஒவ்வொரு மாகாணத்திற்கும் தகுந்தவாறு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது."

'அயல்நாட்டு விருதுகளைப் பெருதீர்'

'அவைகளைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப் போவதில்லை'

இந்திய சர்க்கார் அதிகாரிகளுக்கு மத்திய சர்க்கார் கோரிக்கை!

புதுடில்லி, மார்ச் 28—

வெளிநாட்டுச் சர்க்கார்கள்—காமன்வேல்த் நாட்டுச் சர்க்கார்கள் உட்பட—தருகின்ற பட்டங்கள், மரியாதைகள், உபசரிப்புகள் போன்றவற்றை இனிமேல், சாதாரண இராணுவ அதிகாரிகள் உட்பட எந்த சர்க்கார் அதிகாரிகளும் பெற்றுக்கோள்வதைத் தடுக்க வேண்டும் என்று, இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது குறித்து அதிகார பூர்வமான தகவல்கள் ஏதும் இதுவரையிலும் தரப்படவில்லையென்றாலும் இந்திய சர்க்காரிலுள்ள பல திறப்பட்ட இலாகா அமைச்சரவைகளும் மற்றுமுள்ள இந்தியத் தூதுக் குழுக்கள், மற்றும் பலவகைப்பட்ட தலைமை அதிகாரிகளும் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றனராம்.

சர்க்கார் அலுவல்களில் ஈடுபட்டிராத மற்ற இந்திய மக்களும், இந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சர்க்கார் எதிர்பார்க்கிறதாம். அதே நேரத்தில், இந்தத் தடையை அவர்கள்மீது திணிக்க எந்தவிதமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளையோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளையோ எடுப்பதில்லையென்றும் முடிவு செய்திருக்கிறதாம்.

வெளிநாட்டுச் சர்க்கார் தருகின்ற விருதுகளை எல்லாம் இந்திய சர்க்கார் இனிமேல் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதே இந்த முடிவிற்கான முக்கியக் காரணமாகும் என்றும், இந்திய சர்க்காரின் இந்த முடிவு, இந்தியத் தூதுக் குழுக்களின் மூலம் எல்லா அயல் நாடுகளுக்கும் தெரிவிக்கப்பட இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

வெளிநாட்டு விருதுகளைப் பொறுத்தவரையில், ஏதேனும் தவிர்க்க முடியாத நிலைமைகளில் மட்டுமே அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி இந்திய அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் மற்ற அயல் நாட்டிலுள்ள முக்கியமானவர்கள் இங்கு வருகை தந்ததையொட்டி இங்குள்ள இந்திய அதிகாரிகளுக்கு விருதுகள் அளிக்க அந்தந்த சர்க்கார்கள் முன்வந்தன. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் 'தவிர்க்க முடியாத' நிலைமையால் ஏற்பட்டவை என்று இந்திய சர்க்கார் கருதுவதற்கில்லை என்றும் விளக்கம் கூறப்படுகிறதாம்.

இதுபோலவேதான், வெளிநாடுகளில் இருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் அங்கு விருதுகள் வழங்கப்படுவதை ஆதரிக்கப்போவதில்லை என்றும் இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம். ஏனெனில் அவர்கள் குறிப்பிட தகுந்த சேவைகள் ஏதேனும் அந்த நாட்டுக்கு அவர்கள் புரிந்துவிட்டார்கள் என்பதற்காக அல்லாமல், சாதாரணமாக இங்கு தரப்படுவதைப் பின்பற்றியேதான் அவை தரப்படுகின்றதால் தான் அவற்றையும் அங்கீகரிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்ததற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்துடன் மட்டுமின்றி, இந்தியத் தூதுவர்களோ, அல்லது அமைச்சர்களோகூட அயல் நாட்டு விருதுகள் வாங்கக்கூடாது என்பதில் கடுமையான—கண்டிப்பான முறையை மேற்கொள்ளவும் இருக்கிறதாம்.

'தென்னாட்டை வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்கள்'

'நிதி ஒதுக்குவதில் காட்டியுள்ள வேறுபாடு வேதனை தருவதாக இருக்கிறது'

மதுரை வர்த்தக சபைத் தலைவர் மனக்குமுறல்

மதுரை, மார்ச் 25—

"பல்வேறு விதமான தொழில்கள் நிறைந்துள்ள பம்பாய் மாகாணத்திற்கு அதிகப்படியான தொகையும், சகல துறைகளிலும் பின்தங்கியுள்ள தென்னை மாகாணத்திற்கு அவர்கள் கேட்ட தொகைக்கு மிகக் குறைவாகவும் மத்திய அரசாங்கம் தொகை அனுமதித்துள்ளது. தென்னாட்டை வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்களோ என்ற ஐயத்தை இது ஏற்படுத்துகிறது தேச பக்தியில் எத்துறையிலும் பின்வாங்காத சென்னை மாகாண மக்களுக்குச் சரியான உதவி கிடைக்கச் செய்ய வேண்டுகிறோம்,"

என்று, மத்திய அரசாங்க நிதிக் குழுத் தலைவர் கே. சந்தானத்தை வரவேற்றுப் பேசுகையில், மதுரை — இராமநாதபுரம் வர்த்தக சபைத் தலைவர் திரு. வி. பி. ஆர். செங்காராம் துரைராசு கேட்டுக்கொண்டார்.

மதுரை, இராமநாதபுரம் வர்த்தக சபையின் சார்பில் நிதிக் குழுத் தலைவருக்கு இன்று வரவேற்பளிக்கப்பட்டது.

ஏராளமான தொழிலதிபர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டின் வளர்ச்சிக்காக ரூ. 4,800 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாகாணங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 2,214 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சகல துறைகளிலும் பின் தங்கியுள்ள சென்னை மாகாணத்திற்கு ரூ. 170 கோடிதான் ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்கள் கேட்ட தொகையிலும் ரூ. 59 கோடியைக் குறைத்துவிட்டார்கள். தென்னாட்டு மக்கள் முதலில் அவமானப்படத்தான் வேண்டியிருக்கிறது.

"நூற்பு ஆலைகளும், சணல் ஆலைகளும், சர்க்கரை ஆலைகளும் நிறைந்துள்ள பம்பாய் மாகாணத்திற்கு வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ. 264·4 கோடியும், தொழில்துறையில் பின்தங்கியுள்ள சென்னை மாகாணத்திற்கு ரூ. 170 கோடியும் ஒதுக்கியிருப்பது வேதனையளிக்கக் கூடியதாக இருக்கிறது. பம்பாயும், சென்னையும் மக்கள் எண்ணிக்கையில் சரிசமமாக இருக்கும்போது இவ்வளவு பாகுபாடு காட்டியிருப்பதைக் கண்டு நாங்கள் வேதனைப்படுகிறோம்.

"சென்னை மாகாண மக்கள் தியாகம் செய்வதில் பின்தங்கியவர்கள் அல்ல. வடநாட்டிலுள்ள பிச்சைக்காரர்களைப் பார்த்தாலும் அவர்கள் தமிழர்களாகத்தான் இருக்கிறார்கள். தமிழர்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் கூடுமான அளவு சென்னை மாகாணத்திற்கு நிதி உதவியை அதிகரிக்கச் செய்யவேண்டும்."

சித்தரஞ்சனில் புதிய எஃகு உற்பத்தித் தொழிற்சாலை

அமெரிக்க உதவியுடன் நிறுவப்படும்

புதுடில்லி, மார்ச் 24—

1956-வது நிதி ஆண்டுக்கென (ஜூலை 1, 1955 முதல் ஜூன் 30, 1956 வரை) ஒதுக்கப்பட்ட 1-கோடி டாலர்கள் தொழில் துறை வளர்ச்சி உதவித் திட்டத்தின் கீழ் முதல் 12 திட்டங்கள் செயலாற்றப்படுவதற்கான உடன்படிக்கைகள் இந்திய - அமெரிக்க அரசாங்கங்களுக்கிடையே கையெழுத்தாகியுள்ளன.

இத்திட்டங்களுக்கான உடன்படிக்கைகளின்படி கிடைக்கும் உதவித் தொகை 25 இலட்சம் டாலர்களாகும். தொழில் துறை வளர்ச்சித் திட்டங்களைச் செயலாற்றுவதற்கான தொழில் நுணுக்க முறைகளைத் தெரிந்துகொள்வதே இவ்வுடன்படிக்கைகளின் முக்கிய நோக்கம்.

உதவித் தொகை கொண்டு செயலாற்றப்படவிருக்கும் 12 திட்டங்களில் கீழ்க்காணும் திட்டங்களும் அடங்கும் :—

சித்தரஞ்சனில் புதிய எஃகு உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படும்; மின்சார சக்தியின் பயன்களை ஆராய்ந்து கண்டறியும் நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்; கொப்பரைத் தேங்காய் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவு முறையின் வளர்ச்சிக்கான திட்டம் ஒன்றும் செயலாற்றப்படும்; 'மலேரியா' என்னும் ஒருவகை நோயினைத் தடுக்கும் திட்டமும் விரிபடுத்தப்படும்.

அமெரிக்க நாட்டினைச் சேர்ந்த அனைத்து நாடுகள் கூட்டுறவு நிர்வாகக் குழு இந்தியத் தொழில் துறைக் கல்விக் குழுக்களுக்கு அதிகமான உதவி அளிக்கும்.

வேறு பல திட்டங்கள் இந்திய நாட்டின் சமுதாய, விவசாய, விஞ்ஞான வளர்ச்சிக்காகச் செயலாற்றப்படும். மீன் பண்ணைகளின் வளர்ச்சியும் திட்டத்தில் இடம் பெறும்.

கோட்டையின் பெயரை மாற்றத் தீர்மானம்

சென்னை மேல் (சட்ட) சபையில் வருகிறது

சென்னை, மார்ச் 28—

சென்னையிலுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் பெயரை நீக்கிவிட்டு, அதை 'ஜவாகர் கோட்டை' என்று அழைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யும் தனி நபர் தீர்மானம் ஒன்று சென்னை மேல்(சட்ட)சபையில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்தை டி. எம். தெய்வசிகாமணி (ஆச்சாரி) என்ற உறுப்பினர் பிரேரபித்திருக்கிறார்.

அத்துடன், 'செயின்ட் ஜார்ஜ் கெஜட்' என்ற சர்க்கார் பத்திரிகையின் பெயரையும் இனிமேல் 'சென்னை சர்க்கார் கெஜட்' என்றே அழைக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் அத்துடன் அடங்கியிருக்கிறது.

பஞ்சாப் சட்டசபையில் மசோதா நிறைவேற்றம்

காங்கிரஸ் இந்து உறுப்பினர்கள் தடையை மீறி எதிர்த்துப் பேசினர்

காங்கிரஸ் கட்டளை மதிப்பிழந்தது

சாந்திகார், மார்ச் 24—

பஞ்சாப் விதான் சபா, மாநிலப் புது அமைப்பு மசோதாமீது கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரரேபணைகளையெல்லாம் நிராகரித்து விட்டு, மசோதாவை அப்படியே அங்கீகரித்துவிட்டிருக்கிறது.

மசோதாவை அங்கீகரிக்கும் போது, காங்கிரசாருடன் சேர்ந்து அகாலிகளும் ஆரவாரம் செய்து வரவேற்று இருக்கின்றனர்.

சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கொரடாவின் கட்டளையையும் மீறி ஜலந்தர் வட்டத்தைச் சேர்ந்த இந்து காங்கிரஸ் உறுப்பினர்கள், கோரப்பட்ட மகா பஞ்சாப் மாநிலத்தில் இமாசலப் பிரதேசமும் உள்ளடங்கியிருக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினர்.

மண்டல மன்ற அமைப்புகள் குறித்து சட்டசபையில் பொதுப் படையான வரவேற்பு இருந்தாலும், தற்போது இருந்து வருகிற உத்தேச வட்டாரக் குழுக்களின் செயல் முறைகள் குறித்துத் தங்களின் திருப்தியைப் பல உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

தேவிகுளம்-பீர்மேடு...

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

போது, சபை முழுவதும், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழ் நாட்டுடனேயே சேர்க்கப்பட வேண்டும் என்ற தங்கள் ஒருமித்தக் கருத்தை மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்தது. ஆனால் இப்போது, முன்னால் தாங்கள் கொண்டிருந்த உறுதியை இப்போது கைவிட்டுவிடுவது கூடாது. எனவே, சபைத் தலைவரும், சர்க்காரும், தங்களுடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டு தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்கே ஆக வேண்டுமென்று உறுதி கொள்வதின்மூலம், அப்பகுதி மீதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதை முழுவதுமாகப் பாராளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தோழர் சுயம்பிரகாசம் அவர்கள் கொடுத்த மேற்கண்ட பிரரேபணையை தோழர் எ. இரத்தினம் அவர்களும் ஆதரித்திருக்கிறார்.

விவாதத்திற்குப் பதிலிறுத்துப் பேசிய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியதாவது :—

"இந்தத் திருத்தப் பிரரேபணைகளை எல்லாம் ஏற்கனவே விவாதித்து அம்முடிவின் பின்னரே மசோதா தயாரிக்கப்பட்டது. மீண்டும் அவற்றையே கிளப்பிக் கொண்டிருப்பதால் வாத-எதிர்வாதங்களும், கிளர்ச்சிகளும்தான் உருவாகும். எனவே, உறுப்பினர்கள் மீண்டும் குழப்பத்தை உண்டு பண்ண வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"எல்லைக் குழு நியமனத்தைப் பொறுத்தவரையில் மாநிலக் குழுவின் கருத்துக்களைப் பிரதமரும், உள்நாட்டு அமைச்சரும் கலந்தாலோசித்து இறுதியான முடிவு தெரிவித்திருக்கிறார்கள் எனவே, இனிமேல் இந்த முடிவு தவறு என்று யாரைக் குற்றம் சுமத்த முடியும்? எனவே, இப்பிரச்சினையை அப்படியே நிறுத்தி வைத்துக்கொள்வதுதான் உகந்த வழி; இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் எங்களாலியன்ற அளவு முயற்சி செய்தும்கூட, மேலிடத்து முடிவு அவர்களுக்குச் சாதகமாக அமையவில்லை என்று எப்போதாவது ஒரு சமயத்தில் மக்களுக்குத் தெரிவிக்க நமக்கு தைரியமும் பிறக்கும்."

இவ்வாறு கூறிய அமைச்சர், உறுப்பினர்கள் தங்களுடைய பிரரேபணைகளை வற்புறுத்தாமல்விட்டு விடுவதே நல்லது என்றும், அந்தத் திருத்தப் பிரரேபணைகளில் ஒன்றைக்கூட சர்க்கார் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார்.

நெய்வேலி திட்டம்

பாதிக்கப்பட்டோர் நலனுக்கு வழிகோலப்படுமென அறிவிப்பு

சென்னை, மார்ச் 29—

"நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்குப் பூர்வாங்கமாகத் தண்ணீர் இறைப்புக்கான 100 நாள் நடைமுறை சோதனை முடிந்த பின்னர் பழுப்பு நிலக்கரித் திட்டம் அனுமதிக்கப்படும்; பின்னர் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு நிலக்கரி வெட்டும் வேலைத் துவங்கும்,"

என்று, சென்னை சட்டசபையில் தொழிலமைச்சர் எம். பக்தவத்சலம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேல் மண் பரப்பை அகற்றவும் ஏற்பாடுகள் நடந்து வருகிறதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இத்திட்டத்தால் நிலங்கள் ஆர்ஜிதம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு தருவதோடு, அவர்கள் நல்வாழ்விற்கு வகை செய்வதும் கவனிக்கப்பட வேண்டுமென்ற இந்த சர்க்காரின் கருத்தை இந்திய அரசினரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். நஷ்டஈடு தொகைப்பற்றி இருக்கும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது இது போதாதென்போர் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

இறைக்கப்படும் தண்ணீர் ஒரு ஏரியில் விடப்பட்டு பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எஸ். ஆர். யூ. அமைப்புக் கூட்டம்

"2—4—56 திங்கள் மாலை 5-30 மணிக்கு 'எப்' டைப் 73-க்கு எதிர்ப்புறமுள்ள பொன்மலைப்பட்டி திரு. மைக்கேல் அவர்கள் இல்லத்தில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் பொன்மலை எஸ். ஆர். யூ.—கிளை அமைப்பு சம்பந்தமாக ஓர் கூட்டம் நடைபெறும்,"

என்று, அமைப்பாளர்கள் ஜி. பராங்குசம், ஏ. சம்சுடீன் அறிவிக்கின்றனர்.

குறிப்பு :—கூட்டம் 6-30 மணிக்கெல்லாம் முடிவடைந்துவிடுமாதலால் வெளியூர் தோழர்கள் அவசியம் கலந்துகொண்டு செல்ல வேண்டுகிறோம்.

வேலாயுதம் படிப்பக கட்டிட நிதி நாடகம்

4-4-56 இரவு, இடப்பாடி வேலாயுதம் படிப்பகக் கட்டிட நிதிக்காக, இடப்பாடி வள்ளுவர் கலா மன்றத்தாரால், தோழர் கே. ஜி. இராதாமணாளன் தீட்டிய 'அரக்குமாளிகை' என்ற நாடகம், தோழர் கண்ணதாசன் தலைமையில் நடைபெறும். சேலம் மாவட்ட தி. மு. க. துணைச் செயளாளர் ப. இராமலிங்கம், மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் இரா. தாண்டவன் நடிப்பர்.

சென்னை 23-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு :

1-4-56 காலை 10-மணிக்கு, கழகப் பணிமனையில், செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு கணக்குகள், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

பெங்களூர் திரு.வி.க. மன்றப் பொதுக்கூட்டம்

1—4—56 மாலை 6 மணிக்கு, பெங்களூர் தண்டு, சிவன் செட்டி கார்டன் (சங்கரநாராயண சபை அருகில்) திரு. வி. க. மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி தலைமையில் திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் சொற்பொழிவாற்றுவார்.

கள்ளக்குறிச்சி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

பிப். 20—அர்த்தாலை யொட்டி கைதான கள்ளக் குறிச்சித் தோழர்களை துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 19—3—56ல் சந்தித்து நிலைமையை அறிந்து வந்ததை 22-3-56 இதழில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

21—3—56 அன்று தோழர் சி. சன்னகேசவுலு உள்ளிட்ட 13 தோழர்களும் வழக்கிற்கு உளுந்தூர்பேட்டை முதல் வகுப்பு 'மாஜிஸ்திரேட் கோர்ட்டு'க்கு சென்றதில், அவ்வழக்கும் 26-3-56 அன்று ஒத்திவைக்கப் பட்டுள்ளதுடன் குற்றப் பத்திரிகையின் பிரதியும் கொடுக்கப்படவில்லை; விசாரணையும் செய்யவில்லை.

தோழர் மு. பாண்டியன் உள்ளிட்ட 12 தோழர்களின் வழக்கும், தோழர் சி. சன்னகேசவுலு உள்ளிட்ட 13 தோழர்களின் வழக்கும் 26—3—56ல் வந்தமையால் தோழர்கள் 25 பேரும் உளுந்தூர் பேட்டை நீதி மன்றத்திற்கு சென்றிருந்தனர். தோழர் மு பாண்டியன் உள்ளிட்ட 12 தோழர்களுக்கு குற்றப் பத்திரிகையின் பிரதியை கையெழுத்து வாங்கிக்கொண்டு கொடுத்தனர். தோழர் சி. சன்னகேசவுலு உள்ளிட்ட 13 தோழர்களுக்கு குற்றப் பத்திரிகையின் பிரதி 29—3—56ல் தருவதாக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

12 தோழர்களின் வழக்கு மீண்டும் 3—4—56ல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது என நீதிபதி தெரிவித்துள்ளார். தோழர்கள் மு. பாண்டியன், து. மப்பு, பி. இராமமூர்த்தி இரா. மனோகரன், இரா. வெங்கிடசாமி, இரா. ஆள்வார், த. பழனி, ஆ. கோவிந்தராசன், ம. அங்கமுத்து, தே சுகதேவ், வை. முத்துசாமி, வீ. பெரியசாமி ஆகிய 12-தோழர்கள் குற்றப் பத்திரிகை வாங்கியுள்ளனர்.

தோழர்கள் சின்னசாமி, காசி, கணேசன், நாராயணன், சின்னத்தம்பி, ரங்கபாஷ்யம், செயராமன், கண்ணன், பாலு, இராமசாமி, ஆறுமுகம், கண்ணன், சின்னையன் ஆகிய 13 தோழர்கள் குற்றப் பத்திரிகை வாங்கவில்லை.

வயதுவந்த சுரங்கத்தொழிலாளர்களுக்குக் கல்வி, பொழுதுபோக்கு வசதிகளை அளித்து வருவதற்காக, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் நல நிதி நிறுவனம் இதுவரை வயது வந்தவர்களுக்காக 44 கல்வி நிலையங்களை ஆரம்பித்து இருக்கிறது.

கழகக் கூட்டம்

★

அரக்கோணம் :

தருமராசாகோயில் மைதானம்

1—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

எம். கே. அம்பிகாபதி

பேசுவோர் :

மு. கருணாநிதி
முல்லை-சத்தி
ஏ. எல். சி. கிருட்ணசாமி
வி. முனுசாமி
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி

குறிப்பு : மாலை 4 மணிக்கு ஊர்வலம் நடைபெறும். தோழர் சா. வே. முருகேசன் இன்னிசை வழங்குவார்.

★

மருதூர் :

குமரவேலன் திடல்

1—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

பி. போலமன்

பேசுவோர்:

என். வி. நடராசன்
மீ.சு. இளமுருகு-பொற்செல்வி
பி. எஸ். கலைமணி குழுவினர் இன்னிசை வழங்குவர்

★

கொணவட்டம்(வேலூர்)

தி. மு. க. (கிளை) துவக்க விழாவும்—திருவள்ளுவர் நூல் இல்லம் திறப்பு விழாவும்

1—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

மா. பா. சாரதி

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
அ. கருத்தோவியன்
கே. ஆர். குமார்
வி. ஜி. என். சாமி

★

மதுரைநகர் :

புட்டுத்தோப்பு மைதானம்

1—4—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

முகவை-ஆர்.எஸ். பாண்டியன்
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்

★

சத்திரவாடி :

(சித்தூர் மாவட்டம்)

2—4—56 இரவு 4-30 மணிக்கு

தலைவர் :

இராம-அரங்கண்ணல்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
மா. கலைச்செல்வன்
என். பி. வீராசாமி

காஞ்சி-வே. முருகேசன் அவர்கள் இன்னிசை வழங்குவார்.

ஆலந்தூர் தி. மு. கழகத் தோழர்கட்கு :

31—3—56 இரவு 9½ மணிக்கு, கழக இல்லத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமையம் கழக வரவு-செலவு, மற்றும் சில பிரச்சினைகள் பற்றி முடிவு செய்யப்படும்.

வேலூர் தி. மு. கழகத் தோழர்களுக்கு :

1—4—56 2-30 மணிக்கு, வேலூர் டவுனுலில், தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு கருத்துரை வழங்குவார்

சோஷலிஸ்டு கட்சி ஊழியர்கள் கூட்டம்

1—4—56 காலை 10 மணிக்கு, பல்லாவரத்தில் தோழர் கே. ஆர். நல்லசிவம் எம் எல். ஏ. தலைமையில், செங்கற்பட்டு மாவட்டசோஷலிஸ்டு கட்சி ஊழியர்கள் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். பி. ஆதித்தன், என். பி. லோகநாதன், கே. வரதராமானுஜம், ஏ. வெங்கடாசலம் கலந்துகொள்வார்கள்.

நூலை நகர இளைஞர் கழகம்

இலக்கியப் பகுதியின் 24-ம் ஆண்டு துவக்க விழா 31—3—56 மாலை 6 மணிக்கு, எண். 10 மாணிக்க செட்டித் தெரு, கழக மனையில் தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம் எல் ஏ. தலைமையில் நடைபெறும். தோழர் மா. நன்னன் 'இலக்கிய இன்பம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றுவார்.

* * *

1—4—56 காலை 8-30 மணிக்கு திரு. டி. எம். தாமோதரம் தலைமையில் சுகாதார ஊர்வலம் ஒன்று நூலையிலுள்ள குருசேடிபுரம், குமாரசாமிராஜபுரம் ஆகிய சேரிகளுக்கு சென்று சுகாதாரப் பணியாற்றும். அவ்வமயம் எல்லோருக்கும் பால் இலவசமாக வழங்கப்படும்.

தாய்மார்க் கழக கூட்டம்

சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில், 31—3—56 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை முத்துக் கிருஷ்ணன் தெரு, 28-ம் எண்ணுள்ள இல்லத்தில் மாதாந்திரக் கூட்டம் நடைபெறும். மயிலை சிவ-முத்து தலைமை வகிப்பார். திருமதி. சரஸ்வதி பாண்டுரங்கம், கலைச்செல்வி, கமலா பாலசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

திருக்குறள் சொற்பொழிவு

1-4-56 காலை 9-மணிக்கு, சென்னை இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில், திரு. ப. இராமநாத (பிள்ளை) தலைமையில், 'திருக்குறளின்பம்' என்ற தலைப்பில், திரு. ஓ ரா. கிருட்டிணசாமி சொற்பொழிவாற்றுவார்.

சுகாதாரப் பிரச்சாரம்

1-4-56 காலை 7-மணிக்கு, சென்னை — வண்ணையம்பதி இளங்கோ கலை மன்றச்சார்பில், திரு. மு. நடராசன் தலைமையில், இளங்கோ படிப்பக மாணவ—மாணவிகள், வண்ணையம்பதியில் ஊர்வலமாகச் சென்று சுகாதாரப். பிரச்சாரம் செய்வார்கள்.

சொற்பயிற்சிக்கூட்டம்

30-3-56 மாலை 6-30 மணியளவில் சென்னை—1 எண் 17, சாலை விநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் மு. மனோகரன் அவர்கள் தலைமையில், 'அறிவும் ஆற்றலும்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

* * *

வடசென்னை குறள் நெறிக் கழகம், எண் 59, மன்னார்சாமி கோயில் தெரு, இராயபுரம், கழக அறையில் 31-3-56 மாலை 6-மணிக்கு, தோழர் மணி தலைமையில் 'மதமும் மூடநம்பிக்கை'யும் என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

1-4-56 காலை 9-மணிக்கு புலவர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

* * *

1—4—56 காலை 10 மணிக்கு சென்னை—பிராட்வே, எண் 4/88 ஏ., தி. மு. கழகப் பணிமனையில் தோழர் து. தமிழ்ச்செல்வன் தலைமையில் 'மறுமலர்ச்சி' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

1—4—56 காலை 9 மணியளவில், சென்னை 16-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில் 'கடவுள்' என்ற தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் கணபதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.